மட்டக்களப்பு
சூழல்
விழிப்புணர்வு
மாசிகை

# சூழல்சுடர்

ஆவணி -1993

8

"மன்று, 43- புகையிரத நிலைய குறுக்கு வீதி, மட்டக்களப்பு.



மட்டக்களப்பு மாவட்டச் சூழல் மகத்துவம் விளக்கப்படவும், சூழலிலுண்டாகும் தாக்கங்களை வெளிக்கொணரவும் "சூழல் விழிப்புணர்ச்சி மன்றம்" இவ்விதழை மாதம் ஒரு முறை விரிக்கிறது.

இன்று,
தென்றல் வீசவில்லை - காற்றில்
சோகம் உணர்கின்றோம்
மழை பெய்யவில்லை - சூழலின்
கண்ணீர் காண்கின்றோம்
இதற்குக் காரணம் யார்?

## சுற்றுப்புறச் சூழலும் விவசாயமும்

யோ. இ. கிறிஸ்ரோபர்

கிழக்கு மாகாணம் காலாகாலமாக விவசாயத்தில் முன்னோடியாகத் திகழ்கின்றது. இது யாராலும் மறுக்க முடியாத உண்மையாகும். அண்மைக்காலமாக எமது மாவட்டத்திலே இதற்குமுன் பயிரிட எத்தனிக்கப்படாத பயிரினங்கள் பல பயிரிடப்பட்டு நல்ல விளைச்சலும் பெறப்பட்டுள்ளது. முக்கியமாகக் கூறப்போனால், முட்டைக்கோவா, கரட், பீற்றூட், சின்ன வெங்காயம், போன்ற பயிர்கள் நல்ல விளைச்சலைத் தந்துள்ளன.

ஆனால், இவற்றின் வளர்ச்சிக்கும், பராமரிப்பிற்கும் அதிக அளவிலான இரசாயன உரமும், பீடை நாசினிகளும் பாவிக்கப்படுவதால் சுற்றுப்புறச் சூழலும், மண்ணும், தாவர வளர்ச்சிக்கு உதவும் நுண்ணங்கிகளும் தொடர்ந்து அழிக்கப்பட்டு வருவதை நாம் உணருவதில்லை. எனவே, மண்வளம், பயிரின வளர்ச்சிக்கு உதவும் நுண்ணங்கிகளின் பெருக்கம், பயிர் நாட்டப்படும் இடங்களில் மண்ணுக்கு வளமூட்டும் ஒளிக்குக் குளிர்ச்சியை ஏற்படுத்தும் நல்ல இலைக் காட்டு வளம், பயிர்களை நாசப்படுத்தும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் பக்றீரியாக்கள், உண்ணிகள், பறவையினங்கள் என்பனவற்றின் வளர்ச்சிகள் பேணப்படுவதன் மூலமும் சேதனப் பசளைகள், இயற்கைப் பீடை நாசினிகள் என்பனவற்றைப் பாவிப்பதன் மூலமும் நாம் நிலைநிறுத்தக்கூடிய, சுகாதாரமான, சுற்றுப்புறச் சூழல் மாசடையாத விவசாயத்தை அபிவிருத்தியடையச் செய்யலாம்.

எழுவான் கரைப்பிரதேசம் மணல் நிலமாகவே காணப்படுகின்றது. மரங்கள் அழிக்கப்படுவதனாலும், குடியிருப்பு நிலங்களில் புல், பூண்டுகள் அகற்றப்பட்டு எரிக்கப்படுவதனாலும், மேலும் மேலும் இரசாயனப் பசளைகள் பாவிப்பதனாலும் மண்ணின் வளம் மீட்க முடியாதவாறு கட்டாந்தரையாக மாறிக்கொண்டு வருகின்றது. விவசாய உற்பத்தியிலும் வீழ்ச்சி ஏற்பட்டுக் கொண்டே செல்கின்றது.

மேலைத் தேசத்தவர்கள் உணர்ந்து தக்க நடவடிக்கைகள் எடுக்கின்றார்கள். யாம் எப்போ?

"காலம் கடக்குமுன் அணையைக் கட்டுவோம்"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சூழல் பாதுகாப்பு

இறைவன் எமக்களித்த அற்புதமான அருட்கொடை இப்புவியாகும். இதன் மாண்பினை உணர்ந்துதான் புவியின் பெருமையைப் பன்மொழிப் புலவரும் புகழ்ந்து ஏத்துகின்றனர். வளங்கொழிக்கும் பூமியின் பொன்னாடையாகத் திகழ்வது இயற்கையாகும். இயற்கையன்னை அணி செய்யும் இப்புவியின் இன்றியமையாத உறுப்புதான் சூழலாகும். எம்மைச் சூழவுள்ளது சூழல் எனப்படும். இச்சூழலானது இயல்பாகவே ஒரு சமநிலையைப் பெற்றுள்ளது. இவ்வியற்கைச் சமநிலையே சூழலின் பாதுகாப்புக் கவசமாம். ஆயினும் எமது புவியானது இன்று பல்வேறு மனித நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு இயற்கைச் சமநிலை அருகி, சூழலின் பரிணாமங்கள் விகற்பமுற்று எம்மைப் பாதுகாக்கும் சூழலே எம்மை அச்சுறுத்தும் நிலை உருவாகியுள்ளது. சூழற்பாதுகாப்பின் அவசியத்தையும் அதற்கான வழிமுறைகளையும் இக் கட்டுரையின் வாயிலாக ஆராய்வோம்.

நிலமகளின் போர்வையாகத் திகழ்வது சூழலாகும் இச் சூழலானது நிலச்சூழல், நீர்ச்சூழல், வளிச்சூழல் என மூவகைப்படும். இம் மூன்று சூழலும் இன்று மாசடைந்து கொண்டு வருகின்றது. சூழலின் மாசடைவும் அதன் எதிர் விளைவுகளும் உலகில் ஏற்படுத்திய விளைவுகளோ மிக மிகக் கோரமானவை. சூழலைப் பாதுகாப்பதன் அவசியமானது இதன் மூலமாக உணரப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட சூழலானது மனித சிந்தனையின் தன்னிச்சைப் போக்கினாலும் பொறுப்பற்ற நடவடிக்கைகளினாலும் ஏற்படுகின்றன.

"வானையளப்போம்; கடல் மீனையளப்போம்;
சந்திர மண்டலத்தினைக் கண்டு தெளிவோம்;"

என்று பண்டை நாளிற் கனவு கண்டான் கவிபாரதி. அவன் அன்று கண்ட கனவுகள் இன்று நனவாகிவிட்டன. ஆனால் விந்தை படைக்கின்ற மனித குலம் சிந்திக்க மறந்துவிட்டது. இன்று சூழல் நஞ்சாகி, பாரிய ஆபத்துக்கள் உருவாகியுள்ளன.

நாம் வாழ்கின்ற நிலச்சூழலை எடுப்போமானால் இச் சூழல் எத்துணை அளவு மாசடைந்துள்ளது என்பதை நன்குணரலாம். நிலச்சூழலானது மனிதன், விலங்குகள் போன்ற காரணிகளால் மாசடைகின்றது. நிலத்தின் சூழலின் கண்ணே அசுத்தமான குப்பைக் கூழங்கள் அகற்றப்படுகின்றன. மலம் கழித்தல், எச்சில் உமிழ்தல் போன்ற கழிவகற்றும் செயற்பாடுகள் ஒழுங்கற்ற முறையில் நிகழ்வதனால் நிலம் மாசடைகின்றது. நிலமகளின் மீது எத்தனையோ இயற்கைச் செல்வங்கள் இயற்கையாகவே அமைந்துள்ளன. இவற்றில் எம் நிலத்தின் கவசங்களாகக் காடுகள் காணப்படுகின்றன. ஆனால், இன்று இக் காடுகள் வேகமாக அழிக்கப்படுகின்றன. காடழிப்பும் பெரும்பாலும் மனித நடவடிக்கைகளாலேயே ஏற்படுகின்றது. வனங்கள் பரிதாபமாகவும் பலாத்காரமாகவும் அழிக்கப்படுவதனால் மழைவளம் குன்றுகின்றது. முகில்த்தடையினை உருவாக்கும் மரங்கள் வெட்டப்பட்டால், மழை எங்ஙனம் பொழியும்? இதனால், கொடிய வரட்சி, காட்டுத்தீ பரவுதல் போன்ற பாதகமான விளைவுகள் தோன்றுகின்றன. இது மாத்திரமா? மண் சரிவு, மலைச் சரிவு, பூமியின் உஷ்ணநிலை அதிகரிப்பு ஆகிய அபாயங்களும் சூழலில் உண்டாகின்றன. காட்டு விலங்குகளின் அட்டகாசமும் அதிகரிக்கின்றது. அருமருந்தான மூலிகைகள் முடிவு நிலையினை எய்துகின்றன. தேசியத் திருவான வனவிலங்குகளும், பறவைகளும் அருகிப்போகின்றன.

நீர்ச்சூழலானது, மனிதனின் பொறுப்பற்ற நடவடிக்கைகளால் மாசடைகின்றது. நீர் நிலைகளில் மலங்கழித்தல், கால்நடைகளைக் கழுவுதல் ஆகிய நடவடிக்கைகள் நீரினது புனிதத்தன்மையை அழித்துவிடுகின்றன. பாரிய

தொடர்ச்சி..4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சுடர்

## பேணுவோம் நம் சூழலை

வெட்ட வெளியாய்க் கிடக்கும் நிலமதில்
தேடியொரு விதை நாமும் விதைத்திடுவோம்
திட்டமுடன் அதைப் பேணி வளர்த்திட்டால்
சேர்ந்திடும் தொல்லைகள் யாவும் மறைந்திடும்.

பட்டப் பகலிலே கொதிக்கும் வெயிலினில்
மிக்க கெதியில் காயுது நம் நிலம்
சொட்டற வற்றுது குட்டை குளமெல்லாம்
மிக்க விரைவாக நாட்டு மரமொன்றை.

கிட்ட நெருங்கிடும் நோய்நொடி யெல்லாம்
ஓடி மறைந்திட வேண்டு மென்றால்
வெட்டிட லாகாது வளர்த்த மரங்களை
ஓரமாய் அதற்கென நாட்டு மரமொன்றை.

வாட்டமில்லாது பயிர் செழித்திடவே
ஓர் உபாயமிருக்குது சொல்லட்டுமா?
எட்ட ஒதுக்கிடும் வீட்டுக் கழிவினை
கூட்டுரமா யதிற் போட்டு விடு.

தோட்டம் துரவுகள் யாவும் நிறைந்திடும்
குப்பை அழுக்குகள் நாற்ற மெடுக்குது
எட்ட விலகிட மூக்கைத் துளைக்குது
குழியினில் மூடிடு தொல்லை தொலையுது.

ஆக்கம் :- க. குமாரசூரியம்,
மட்/களுவன்கேணி வி.வி.

## சூழல் பாதுகாப்பு

ஆயிரமாயிரம் ஆண்டுகள் தோறும்
சூழலின் சுகந்தம் தூய்மையுடன் திகழ
சுகாதார சூழல் பாதுகாப்பில்
சுற்றிவர சூழல் சுத்தமவசியம்.

விரைவாய்ப் பெருகும் வீதிக் கழிவுகள்
விரைந்து ஓடும் வெள்ள சுமைகள்
விழலுக் கிறைத்த நீராக விடாமல்
விரைவாய் சுத்தம் செய்திட லவசியம்.

பாரிலே நல்ல பசுமை செழிக்க
பாரிய விருட்சம் பயிரிட வேண்டும்
பாங்கான வாழ்வில் பசுமை மலர
பண்பாளர் பலரும் பரிசாக மரங்
களைப் பயிராக்குவோம்.

மாநிலம் தன்னில் மரமொன்று நடுவோம்
மங்காத வாழ்வில் மரங்களை நுகர
மாண்புடன் நல்ல மரங்களை நட்டு
மாண்பாக வாழப் பணி செய்வோம்.

வெயிலுக்கு ஒரு குடை
வெண்மைக்கு விரி தளிர் குளுமை
அளவான மழைக்கும் முகிலுக்கும்
அணியாய் மரங்களைப் பயிரிடுவோம்.

அணியாய் சால ஆயிரம் மரங்கள்
ஆர்வமாய் நாமும் பயிரிட்டு
ஆசையாய் சூழலை அன்புடன் பேணி
மங்கா சேவை செய்திடுவோம்.

ஆக்கம் :- செ. சாந்தினி,
சித்தாண்டி பெ.அ.ம.

## கலையும் சூழல்

காட்டை வெட்டுகிறாய்
கால்நடையை அழிக்கிறாய்
கண்டபடி நீருக்குள்
கழிவுகளைக் கொட்டுகிறாய்.

ஏனென்று கேட்டால்
எரிந்து விழுகிறாய்
இப்போது விளைவு
எல்லோர்க்கும் அழிவு.

முட்டாள் மனிதனின்
முரண்பட்ட வேலையால்
கட்டான சூழல்
கலைந்து விட்டதுவே.

ஆக்கம் :- எம். மனோகரன் (ஆசிரியர்)
மட்/குடியிருப்பு க.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பாடம்

<u>மாம்பழப் பயிர்ச் செய்கை - 1</u>

சென்ற இதழ்த் தொடர்ச்சி..

<u>மாம்பழ ஈ :-</u>

ஈரவலயத்தில் மாம்பழமானது சில சமயங்களில் பழ ஈக்களால் தாக்கப்படலாம். இதன் பொருட்டு முதிர்ந்த பழங்கள் தாக்கப்பட்டு அழுகி விடுகின்றன. அழுகிய பழத்தினுள் புழுக்களைக் காணக்கூடியதாக இருக்கும். பூச்சியின் தாக்கம் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படும் இடங்களில், கனிக்கட்டலின் பொழுது பென்தியோன் 50%செ.கு. 30மி.லீற்றர் நீரில் கலந்து இதற்குக் ¼கி.கி. சீனியும் சேர்த்து தபின் இலைகளிற்கு நன்கு விசிறல் வேண்டும்

<u>அந்திரக்னோஸ் (பறவைக்கண்னோய்) :-</u>

மாவில் காணப்படும் ஒரேயொரு நோய் அந்திரக்னோஸ் ஆகும். இது குறிப்பாக மழைக்காலத்தில் தொழிற்பாடுடைய பங்கசினால் உண்டாக்கப்படுகின்றது. இளந்த விர்கள், பூக்கள், காய்கள் என்பன இதனாற் தாக்கப்படுகின்றன. காய்களில் ஆரம்பத்தில் சிறிய கறுப்பு நிறப் புள்ளிகள் தோன்றுகின்றன. பழமுதிர்ச்சி தொடரும் பொழுது புள்ளிகளின் பருமனும் அதிகரிக்கும் பூத்த இரு கிழமையின் பின்னர் பெரனொக்ஸ் அல்லது மனெப் 30 கிராம் 10 லீற்றர் நீரில் கலந்து மரமொன்றிற்கு விசிறவும்.

<u>அறுவடை :-</u>

நன்கு முற்றிய மாங்காய்கள் தெளிவான சாம்பல் நிறத்தையும் சுண்டும் போது (தெறிக்கும்போது) மென்மையான சத்தத்தையும் கொடுக்கும். இத்தகைய காய்களை நிலத்தில் விழாது கவனமாகப் பறித்தல் வேண்டும் ஏனெனில், நிலத்தில் விழும்போது காய்கள் வெடிக்கக்கூடும். அல்லது நிலத்தில் அடிபடுவதால் காய் இலகுவில் பழுதடையும். எனவே, நீண்ட தடியில் கூடையொன்றைக் கட்டித் தடியின் முனையில் கொழுக்கியொன்றினையும் கட்டித் தயார் செய்து கொண்டு சேதமின்றிக் காய்களைப் பறிக்கலாம்.

ஆக்கம் :- திரு. சண்முகம் (ஆசிரியர்),
மட்/கருவன்கேணி விவேகானந்தா வித்தியாலயம்.

குறிப்பு :- அடுத்த இதழில் பப்பாசிப் பழச்செய்கை வெளியிடப்படும்.

---

## மரம் விடுக்கும் வேண்டுகோள்

மழைக்கால குளிரைப் போக்க உங்கள் வீட்டு வெம்மை. வெயிற்கால வெப்பந்தவிர்க்க உங்களுக்கு நிழல். களைப்புத்தீர, ஆறவமரப் படுத்துறங்கக் கட்டில். திரைகடலோடித் திரவியந்தேடிவரக் கப்பல். உங்கள் உறைவிடத்து விட்டம், மேசையின் பலகை, சின்னஞ்சிறிய குழந்தைகளைத் தாலாட்டத் தொட்டில், உங்களது இறுதி யாத்திரைக்கு உதவும் சவப்பெட்டி. உங்கள் நலத்துக்கு என்னைத் தியாகஞ் செய்கிறேன். இயற்கை வளத்தை இன்னும் அழகுபடுத்துகிறேன். ஓ மனிதர்காள்! என்னைத் தியாகஞ் செய்கிறேன். என்னை நல்வழுறையில் பயன்படுத்தி வாழ்வீர்.

ஆதாரம் :- மில்க்வைட் பிரசுரம்

செல்வன். ஏ.எம்.எம். ரிஸ்வி,
மட்/காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயம்,
காத்தான்குடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரட்சியான காலநிலை நிலவுகின்ற பகுதிகளில் மண்வளம் பேணலும், தொடர் வருமானம் பெறலும்

வரட்சியான காலநிலை நிலவுகின்ற பிரதேசங்களில் பெரும்போக நெற் செய்கை மட்டுமே பயிரிடப்படுகின்றது. இதற்குக் காரணம் இப் பகுதிகளில் போதியளவு நீர் இன்மையாகும். இதனால், இப் பகுதியில் நெல் அறுவடை முடிவடைந்ததும் நிலம் தரிசாக விடப்படுகின்றது. இந்நிலம் தரிசாக விடப்படுவதைத் தவிர்ப்பதற்கு நாங்கள் உப உணவுப் பயிர்களைப் பயிரிடலாம். உப உணவுப் பயிர்களாகிய தட்டைப்பயறு, பாசிப்பயறு, உழுந்து, எள்ளு, சோயா அவரை முதலியவை இப்பயிர்ச்செய்கைக்கு ஏற்றவையாகும். இவ் உப உணவுப் பயிர்களை நெல் அறுவடையின் பின்பு நிலத்தின் ஈரம் வற்றுவதற்கு முன் உடனடியாகப் பயிரிட வேண்டும். இவற்றை பயிரிடுவதற்கான செலவீனமோ மிகக் குறைவாகும். மற்றும் வரட்சியான காலநிலையை சகித்து வாழும் திறமை, ஆற்றல் கொண்டவை இப் பயிர்களாகும். இவற்றில் இருந்து 2 தொடக்கம் 3 மாதங்களில் விளைச்சலைப் பெறலாம். மற்றும் இவற்றுடன் களைகள் வளர்வதும் அரிதாகவே காணப்படும். நீர் இறைத்துப் பயிர் செய்வதாயின் அறுவடையை ஒரு தடவைக்கு மேல் ஏற்படுத்தலாம்.

இப் பயிர்களைப் பயிரிடுவதனால் மண்ணிற்கு ஏற்படும் நன்மைகள்:-

1. நைதரசன் பதிக்கும் இயல்பு இவ் அவரையினத் தாவரங்களுக்குக் காணப்படுவதனால் மண்ணில் நைதரசன் செறிவு அதிகரிக்கின்றது.

2. தரை தரிசாக விடப்படுவது குறைக்கப்பட்டு, களைகள் வளர்வது தடைப்படுகின்றது.

3. பயிரிடப்படும் பயிர்களிலிருந்து சேதனப் பொருட்களை மண் பெற்றுக் கொள்கின்றது.

4. மண்ணரிப்பு தடைப்படுவதுடன் வளமுள்ள மண் அடித்துச் செல்லப்படல் குறைக்கப்படுகின்றது.

5. தரையில் இருந்து நீர் ஆவியாகச் செல்வது குறைக்கப்பட்டு மண்ணின் உப்புத் தன்மை குறைவடைகின்றது.

6. குறிப்பிட்ட வருமானத்தை எதிர்பார்த்து வாழ்ந்த விவசாயி மேலும் வருமானம் பெற வாய்ப்பளிக்கின்றது.

இவற்றிலிருந்து மண் வளம் பேணப்படுவதுடன் வருமானமும் அதிகரிக்கின்றது.

ஆக்கம்:- த. பகீரதன்,
சித்தாண்டி பொதுஜன அ.ம.

---

### வெளியீட்டுக் குழு

சுடரின் தூண்டுகோல்:-
மனோ இராஜசிங்கம் மன்று
யோ.இ. சிறில்தோபர்

நெறிப்படுத்துனர் குழு:-
ரெ. விமலா
அ. யோகராணி மன்று
க. லீலா

ஆசிரியர் குழு:-

| | | |
|---|---|---|
| த. மதிவண்ணன் | - | வந்தாறுமூலை சி.அ.ச |
| பூ. சுந்தரலிங்கம் | - | பொதுஜன அ.ம. |
| வி. முரளிதரன் | - | செங்கலடி ம.வி. |
| சோ. சுந்தரமோகன் | - | கோல்ட் பிஸ் வி.க. |
| லெ. முகம்மது அஸ்ரப் | - | அல்-உறிரா வி. |
| பி. சந்திரவதி | - | உழைக்கும் ம.அ.ரி. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்புகள்

* திரு. ஏ. அலிமொகம்மட்,
சிராமோதய சபைத் தலைவர்,
ஏறாவூர் - 03.

தங்களின் வெளியீடான "சூழல் சுடர்" இதழினைப் படித்தேன். இதனை எனக்கு அனுப்பி வைத்தமைக்கு முதற்கண் நன்றி. உண்மையில் இச் சஞ்சிகையானது மிகவும் பிரயோசனமான ஒன்றாகும். சூழலைப் பற்றியும் அதனைப் பேணுவது பற்றியும் அறிந்து கொள்வதற்கு இச் சஞ்சிகை பெரிதும் துணை புரிகின்றது. எனவே, இந்தச் சஞ்சிகையினை மாதந்தோறும் பெறுவதற்கு விரும்புகிறேன். தயவுசெய்து தங்களின் மாத வெளியீடான சூழல் சுடரை மாதாந்தம் எனக்கு அனுப்பி வைத்துதவுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. எம். எச். எம். உறம்ம்,
28, முப்பது வீட்டுத் திட்டம்,
மீராகேணி, ஏறாவூர்.

சூழல் சுடரின் கடந்த மாத இதழைப் படித்தேன். முழுக்க முழுக்க பிரயோசனமான இச்சுடர் உண்மையில் விரும்பிப்படிக்கக் கூடிய ஒன்று. எனவே, தயவுசெய்து இச் "சூழல் சுடரை" எனக்கும் அனுப்பி வைத்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. மலர்வேந்தன், (உதவி ஆசிரியர்),
தொண்டன்,
44, மட்டக்களப்பு.

தங்களது "சூழல் சுடர் சஞ்சிகை இதழ்கள் கிடைத்தன, நன்றி. காலத்திற்கேற்ற அவசியமான, பயனுள்ள முயற்சி. சூழலைப்பற்றியும், இயற்கைச் செல்வமான மரவளத்தைப்பற்றியும் அனைவரும் அறிந்திருக்க வேண்டிய அறிவார்ந்த பல விடயங்களைத் தொகுத்து வழங்குகிறீர்கள், பாராட்டுக்கள்! பெரியவர்களுக்கும், சிறப்பாக மாணவர்களுக்கு மிக்க பயன் தரும், தொடருங்கள். சஞ்சிகையைத் தொடர்ந்து அனுப்பி வையுங்கள்.

* கலாநிதி. க. கனகராசா ஜே.பி.,
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
யாழ்ப்பாணம்.

"சூழல் சுடர் இதழ் கிடைத்தது, நன்றி. இத்தனை சிறந்த மாசிகையை வெளியிட ஒத்துழைக்கும் ஒவ்வொருவரும் எமது நன்றிக்கு உரியவர்களாகிறார்கள்.

* திரு. ஏ. எல். அனீஸ் அலி,
491, சென்றல் வீதி,
மருதமுனை - 03, கல்முனை.

தங்களது "சூழல் சுடர்" மாசிகை கிடைக்கப் பெற்றேன். இதன் முன்னைய வெளியீடுகளைப் பெறமுடியுமாயின் தந்துதவினால் நலம். இம் மாசிகையைத் தொடர்ந்தும் பெற விரும்புகின்றேன். உரிய விபரங்களை அறிவியுங்கள்.

* செல்வன். எம். என். எம். ஜலீர்,
22, சிராமோதய வீதி,
காத்தான்குடி - 6.

உங்களால் வெளியிடப்படும் "சூழல் சுடர்" என்னும் மாத வெளியீட்டினை நானும் பெறுவதற்கு விரும்புகின்றேன். எனக்கும் இச் சுடரினை அனுப்பி வைக்குமாறு மிக மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

* செல்வன். சரவணமுத்து பிரபாகரன்,
பழுகாமம் 11,
பெரிய போரதீவு.

எனக்கு தாங்கள் வெளியிடும் "சூழல் சுடர்" மாதாந்த வெளியீடுகள் தேவையாக உள்ளபடியால் தயவுசெய்து இவ் இதழினை மாதந்தோறும் எனக்கு அனுப்பி வைக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

அத்தோடு இச் "சூழல் சுடரினது" பிரசுரம், வெளியீடுகளையும் எனக்குத் தவறாது, தாமதியாது அனுப்பி வைக்குமாறு தங்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழல் மாசுபடுவதைத் தவிர்க்க

## முன்மாதிரி வீட்டுத் தோட்டம் அமைத்தல்

சென்ற இதழ்த் தொடர்ச்சி....

பலதரப்பட்ட வாழ்க்கை நிலையிலுள்ள குடும்பங்களில் விசேடமாக கஸ்டப்படும் குடும்பங்கள் அதாவது வருமானம் இல்லாத குடும்பங்கள் இதில் மிகவும் ஊக்கம் காட்டுவதனால், அவர்களுக்குப் போதியளவு சக்திமிக்க உணவு, வருமானம் (பணம்), விறகு, மரம், தடிகள், மருந்து வகை போன்ற பயனுள்ள பொருட்களைப் பெற்றுக்கொள்வதனால் அவர்கள் வாழ்க்கையானது வளம் பெறுவதுடன், அவர்களுடைய குடும்பம் உயர்வடையவும் முடிகிறது.

பூச்சி, புழுக்களின் தாக்கங்களுக்கு சாதாரண பாமர மக்களால் கையாளப்படும் இயற்கை முறைகளைப் பின்பற்றுவதனால் உயிர் ஆபத்துக்கள், சூழல் மாசடைதல் போன்றவற்றிலிருந்து மனிதரை மட்டுமல்லாது பிற பிராணிகளையும் காப்பாற்ற முடியும்.

எனவே, இந்த வீட்டுத் தோட்டத்தில் வீட்டைச் சுற்றி ஓராண்டுப் பயிர்களையும், பல்லாண்டுப் பயிர்களையும், பலவிதமான நாற்றுக்களைக் கலந்து கலப்புப் பயிர்செய்கையையும் இதனை எளிய மனைப்பொருளியல் எனலாம்.

இப்படியான ஒரு திட்டமுள்ள வீட்டுத் தோட்டத்தை செய்வதனாலும், இதனை வீடுதோறும் நடைமுறைப்படுத்துவதனாலும், சூழல் மாசுபடுவதைத் தவிர்த்து, வருமானத்தையும் பெருக்கி நாட்டின் தன்னிறைவுக்காக உழைப்போமாக !

ஆக்கம் :- திருமதி. ந. நவரெத்தினம்,
மட்/மனைப்பொருளியல் பாட
விதான உத்தியோகத்தர்.

## சூழல் பாதுகாப்பு

2ஆம் பக்கத் தொடர்....

தொழிற்சாலைகள் ஒழுங்கான முறையில் பரிகரிக்காத இரசாயனக் கழிவுகளை நீர் நிலைகளில் கலக்கி விடுவதனால் நீர் நச்சுத்தன்மையை எய்துகின்றது. இதன் காரணமாக நீர் வாழ் உயிரினங்கள் இறப்பதுடன் அவற்றிலிருந்து உருவாகும் கிருமிகளும் நீரை மாசடைவிக்கின்றது. பரந்த சமுத்திரங்களிற் பயணிக்கும் பாரிய எண்ணெய்க் கப்பல்கள் நிலக்கரி போன்ற எண்ணெய்களை நீரில் சிந்துவதால் சமுத்திரங்கள் மாசடைகின்றன. அணுவாயுத பரிசோதனைகளின் தீய விளைவுகளும் நீர் நிலைகளைப் பாதிக்கின்றன.

நாம் உயிர் வாழ்வதற்கு மிகவும் இன்றியமையாதது வளியாம். இவ்வளிச் சூழலானது பல்வேறு தூசுமாசுக்களால் மாசடைகின்றது. புவியில் இருந்து சென்றடையும் தூசுதுணிக்கைகள் வளிமண்டலத்தைப் பாதிக்கின்றன. தொழிற்சாலைகள் வெளியேற்றும் நச்சுப்புகையானது வளிப்படலத்தின் தூய்மையை மாற்றுகின்றது. பாவனைக்குதவாத வாகனங்கள் வெளியேற்றும் கரியமிலவாயு, புகைபிடிப்போர் வெளிவிடுகின்ற தீய புகை ஆகியனவும் வளிமண்டலத்தின் தூய்மையைப் பாதிக்கின்றது.

தொடரும்.....

ஆக்கம் :- பா. பரசுராமன்,
சித்தாண்டி பொது
ஜன அபிவிருத்தி
மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுடர்

* சூழல் பாதுகாப்பின் ஒரு நடவடிக்கையாக மரங்களை நடுதலும் உள்ளது. இதற்கமைய மட்/விவேகானந்தா மகளிர் வித்தியாலயத்திற்கு 24.05.1993 அன்று 100 பனங்கன்றுகள் வழங்கப்பட்டன.

*************

* கிராம எழுச்சி விடமைப்புத் திட்டம் பற்றி மட்/ஆரையம்பதி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்ட கூட்டத்தில் எமது நிறுவன உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

*************

* சமூகக்காடு வளர்ப்பு விடயமாக கிராமிய நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கிராம மட்டத்தில் கலந்துரையாடல்கள் நடாத்தப்படுகின்றன.

************

* சீர்திருத்திய பாரம்பரிய விவசாயம், சேதன உரம், இயற்கைமுறைப் பீடைக் கட்டுப்பாடு என்பன சம்பந்தமாக அவுஸ்திரேலிய வெளிநாட்டு சமூக உதவி ஸ்தாபனத்தினால் நாவலப்பிட்டியில் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சித் திட்டத்தில் மன்றுவினால் தெரிவு செய்யப்பட்ட 10 விவசாயிகள் பயிற்சி பெற்றனர்.

*************

* மன்று நிறுவன சமூக அமைப்பாளர்கள், பாடசாலைகளில் மாணவ சூழலியை உருவாக்குவதற்காக கடந்த மாதங்களில் பல பாடசாலைகளுக்குச் சென்றார்கள்.

************

உங்கள் கவனத்திற்கு :-

"சூழல் சுடர்" ஒரு மாதாந்த வெளியீடு. இதனைத் தொடர்ந்து பெற விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

"சூழல் சுடர்",
மன்று,
43, புகையிரத நிலையக் குறுக்கு வீதி,
மட்டக்களப்பு.

திரு. சண்முகம் (அதிபர்)
மட்/ கருவன்கேணி விவேகானந்த
கருவன் கேணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org